# **In the Court of the  District Munsif, Eraniel**

**Original Suit No. 26/2019** **Date:21.04.2026.**

**(DW1)- சுந்தரம்பிள்ளை**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1.நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிப்பாதை ஈஸ்வரபிள்ளையால் எனது சொத்திற்கு ரோட்டில் இருந்து செல்வதற்கு விடபட்ட வழிப்பாதை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வழிப்பாதை சர்வே எண் 60/14 ல் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் பாதை சர்வே எண் 60/7, 60/14 ஆகிய இரண்டு சர்வே எண்களிலும் உள்ளது. நான் குறிப்பிடுவது போல் சர்வே எண் 60/7 ல் எந்த வழிப்பாதையும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள வழிப்பாதையில் ரோட்டில் இருந்து கிழக்கு பக்கமாக 11 லிங்ஸ் இடம்விட்டு கேட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் கேட் அமைக்கப்பட்டுள்ளது  என்றால் சரிதான், ஆனால் அளவுகள்  குறித்து எனக்கு தெரியாது.

2. மேற்படி கேட்டில் இருந்து கிழக்கே செல்லும் வழிப்பாதை 73 லிங்ஸ் நீளம் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் அளவுகள் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் வழிப்பாதையின் நீளம் 84 லிங்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் நான் கூறும் பாதை சர்வே எண் 60/14 ல் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் ரோஸ் நிறத்தில் குறிப்பிட்டுள்ள வழிப்பாதை தான் பழைய வழக்கின் பி பட்டிகை சொத்து என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் நான் குறிப்பிடும் வழிப்பாதை எங்குள்ளது என்றால் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் பாதை குறிப்பிடபடவில்லை.

3. நான் எனது சுயலாபத்திற்காக  இரண்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ள ஈஸ்வரபிள்ளை விட்டுதந்ததாக குறிப்பிடப்படும் வழிப்பாதை இல்லை என்றால் நான் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. ஈஸ்வரபிள்ளை விட்டுதந்ததாக குறிப்பிடும் வழிப்பாதை யாருடைய பெயரில் உள்ளது என்றால் கணபதி விலை கொடுத்து வாங்கிவிட்டார் அவர் பெயரில் உள்ளது. நான் குறிப்பிடும் வழிப்பாதையை நானே குளச்சல் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1221/2000 ஆவணப்படி 06.09.2000 தேதியில் ஈஸ்வரபிள்ளையின் வாரிசுகளிடம் இருந்து கிரயம் பெற்றேன் என்றால் சரிதான்.

4. முந்தைய வழக்கில் மேற்படி ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால்

நினைவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 10 வது பக்கத்தில் முந்தைய வழக்கின் பி பட்டிகை சொத்தை கிரயம் பெற்றதாகவும், ஆனால் அது சம்பந்தமான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நினைவில்லை. இவ்வழக்கிலும் மேற்படி கிரய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைபட்டால் தாக்கல் செய்யலாம். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால் எனது கட்சி பொய் என்று தெரிந்துவிடும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இதற்கு முன்பு தாக்கல் செய்துள்ள வழக்குகளில் உள்ள பி மற்றும் சி பட்டிகை சொத்துக்கள் பொதுவான வழிப்பாதை என்றும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண். 143/2001 வழக்கில் எனது சகோதரருக்கு மேல் சொன்ன வழிப்பாதையில் அவகாசம் உள்ளதாகவும் மேற்படி வழிப்பாதை வழியே எனது சகோதரர் அனுமதி இன்றி எனக்கு மின் இணைப்பு வழங்ககூடாது என்றும் உத்தரவு இடப்பட்டிருந்த நிலையில் எனது மேல் முறையீட்டில் மேற்படி பாதை எனக்கும் எனது சகோதரருக்கும் அவகாசப்பட்டது என்றும் எனது சகோதரரின் அனுமதி இல்லாமல் எனக்கு மின் இணைப்பு கொடுக்கலாம் என்று தீர்ப்பு வழங்கியது என்றால் சரிதான்.

5. மேற்படி மேல்முறையீட்டிலும் ஈஸ்வரபிள்ளை வழங்கிய பாதையும் எனக்கு பாகப்பத்திரப்படி கிடைத்ததாக சொல்லப்படும் வழிப்பாதையும் இருவருக்கும் பொதுவானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கணபதிக்கு உரிமைப்பட்ட 12 செண்டில் அவர் ரஜினிக்கு கொடுத்த 5 செண்டில் வீடு வைத்துள்ளார் என்றால் சரியல்ல, 7 செண்டில் உள்ளது. 7 செண்ட் என்பதை காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் ஆவணம் இல்லை, EO குறிப்பிட்டார். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் பச்சை நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் ரஜினி வீடும் இடமும் என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் தென்மேற்கு பகுதியில் ஒரு பாதை மஞ்சள் கலரில் மேற்கே உள்ள ரோடை சென்று அடையும் வீதம் குறிப்பிடப்பட்டுள்ள என்றால் சரிதான். மேற்படி பாதை வழியாக தான் ரஜினியும் அவரது குடும்பத்தினரும் உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

6. நான் எனது எதிருரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடும் வழிப்பாதை எனக்கும் கணபதிக்கும் இடையே நடந்த வழக்கில் உள்ள சர்வே எண் 60/13, 60/14 உட்பட்ட சொத்து மற்றும் வழிப்பாதை என்றால் சரியல்ல, சர்வே எண் 60/7 உண்டு. மேற்படி முந்தைய வழக்குகளுக்கும் இந்த வழக்கின் வாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள முந்தைய வழக்கின் தீர்ப்புகள் மற்றும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கைகள், இவ்வழக்கின் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் எனது எதிருரையில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 60/13 உட்பிரிவு செய்யப்பட்ட இடம் என்றால் சரிதான், உட்பிரிவு

செய்யப்பட்டது எனது மனுவின் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டது. எப்போது மேற்படி உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றால் சரியாக நினைவில்லை 2013 வருடம் இருக்கலாம்.

7. நான் கோட்டாசியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவை நிறைவேற்றம் செய்ய உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் கணபதி அவருக்கு கிடைத்த 12 செண்ட் சொத்தில் ஒரு செண்ட் சொத்தை தங்கராஜ்க்கு கிரயம் கொடுத்து அதை மறைத்து உட்பிரிவு செய்ததாக எனது மனைவி உட்பிரிவை ரத்து செய்ய மனு செய்தார் என்றால் சரிதான். ஆனால் மேல்முறையீட்டி மாவட்ட வருவாய் அலுவலரிடம் அவர் செய்த கிரயத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். நான் குறிப்பிடுவது போல் எனக்கும் எனது மனைவிக்கும் உரிமைப்பட்ட சொத்தை ஆக்கிரமித்த காரணத்தினால் உட்பிரிவை ரத்து செய்ததாக நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

8. ஈஸ்வரபிள்ளை எனக்கு விட்டுகொடுத்ததாக குறிப்பிடும் பாதை மண் தரை என்றால் சரிதான். வாதி பயன்படுத்தி வரும் பாதை டைல்ஸ் அமைக்கப்பட்ட பாதை என்றால் சரிதான். இரண்டும் வேறு வகையான பாதைகள் என்றால் சரிதான். என் அண்ணன் கணபதி வெளிநாட்டிற்கு சென்று கஷ்டப்பட்டு சம்பதித்து ஊரில் வந்து வீடு வைத்து வாழ்ந்து வந்ததையை சகித்து கொள்ள முடியாத நான் அவருக்கு அவகாசப்பட்ட ஈஸ்வரபிள்ளை விட்டுக்கொடுத்த வழிப்பாதையை கேட் அமைத்து அடைத்து நீதிமன்றம் நாடி உரிய நிவராணம் பெற்ற பின்பும் நான் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வந்ததால் இந்த வழக்கின் வாதி மற்றும் ரஜினி மற்றும் கணபதி தங்கராஜ் என்பவரிடம் இருந்து விலைக்கு வாங்கி தனி வழிப்பாதை ஏற்படுத்தியப்பின்பும் அதை தடுக்கும் நோகத்தில் வன்மத்தோடு செயல்பட்டதால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**